செய்தி வெளியீடு எண்: 115 நாள்:04/09/2022

**வ.உ. சிதம்பரனாரின் 151 - வது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்களின் செய்தி**

வ.உ.சிதம்பரம் பிள்ளை தனது வாழ்வை இந்திய விடுதலைக்காக அர்ப்பணித்து, மகத்தான தியாகங்களைச் செய்தவர். தற்சார்பு பெற்ற சுதந்திர இந்தியாவுக்காக அவர் பாடுபட்டவர். வணிகப் போக்குவரத்தில் ஆங்கிலேயர்களின் ஏகபோக உரிமையை முறியடிக்க முதல் உள்நாட்டு நீராவிக் கப்பல் நிறுவனத்தை நிறுவினார். வங்காளத்தைப் பிரிப்பதன் மூலம் இந்தியச் சமுதாயத்தைப் பிளவுபடுத்தும் ஆங்கிலேயர்களின் கொள்கைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக மாபெரும் மக்கள் இயக்கத்தை அணிதிரட்டினார். அதற்காக, கடுமையான சிறைவாசம் அனுபவித்தார்.

வ.உ.சி. ஒரு புலமை வாய்ந்த அறிஞராகவும் இருந்தார். நமது சுதந்திரத்தின் அமுதப் பெருவிழாக் காலத்தில் தற்சார்பு பாரதம் எனும் சுயச்சார்பின் மூலம் ஒரே பாரதம், உன்னத பாரதம் உருவாகிட நமது நாட்டு இளைஞர்களுக்கு வ.உ.சிதம்பரம் பிள்ளையின் செயலூக்கங்கள் தொடர்ந்து ஊக்கம் அளிப்பனவாக உள்ளன.

இந்த மகத்தான தலைவருக்கு தேசம் இதயப்பூர்வமான அஞ்சலியை செலுத்துகிறது.

---

ஆளுநர் மாளிகை,சென்னை – 22 ஒம்/-

நாள் : 04.09.2022 இணை இயக்குநர்(ம.தொ)